RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 193 | ஜூலை.16 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் தொகுப்பூதிய ஊழியர்களுக்கு 5% ஊதிய உயர்வு

சென்னை: ஜூலை.16-

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தில் பணியாற்றும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு 5 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.




இது குறித்து ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாநில திட்ட இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை விவரம்: இந்த துறையில் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் புரோகிராமர், சிவில் பொறியாளர், கணக்கு மற்றும் தணிக்கை மேலாளர், எம்ஐஎஸ் ஒருங்கிணைப்பாளர், எஸ்எம்சி கணக்காளர், தரவு பதிவு அலுவலர், அலுவலக உதவியாளர், உதவியாளர் ஆகியோருக்கு 5 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்படும்.

நடப்பாண்டு ஜூன் 1ம் தேதி முதல் இந்த ஊதிய உயர்வு அமல்படுத்தப்படும். அரசுப் பணியில் உள்ள ஓய்வு பெற்ற ஆலோசகர்கள், உதவியாளர்களுக்கு இது பொருந்தாது. ஊதிய உயர்வு பெற ஓராண்டு பணி அனுபவம் கட்டாயமாகும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## "டெல்லி காவி அணியின் கனவுத் திட்டம் பலிக்காது!" : முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சிதம்பரம்: ஜூலை.16-

"தமிழ்நாடு ஓரணியில் நிற்கும்போது, டெல்லி காவி அணியின் கனவுத் திட்டமும் பலிக்காது" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் நேற்று (ஜூலை 15) முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். காமராஜர் பிறந்த நாளையொட்டி, சிதம்பரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் காமராஜர் படத்துக்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே வாழ்ந்து தனது வாழ்வையே அர்ப்பணித்தவரான எல்.இளையபெருமாள் திருவுருவச் சிலையுடன் ரூ.6.39 கோடி மதிப்பீட்டில் கட்டிப்பட்டுள்ள நூற்றாண்டு அரங்கத்தை திறந்து வைத்தார்.



பின்னர் அவர் பேசியது: "ஏற்கெனவே 'மக்களுடன் முதல்வர்' திட்டதில் பல லட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டது. தற்போது தொடங்கப்பட்டுள்ள 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 10,000 முகாம்கள் நடைபெறும். தன்னார்வலர்கள் வீடுவீடாக வந்து மக்களின் குறைகளைக் கேட்டு, 46 சேவைகளுக்கான விண்ணப் பங்களை வழங்க உள்ளனர்.

'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் மட்டும் மகளிர் உரிமைத் தொகை விண்ணப்பம் வழங்கப்படும். தகுதி உள்ள மகளிர்க்கு கண்டிப்பாக மகளிர் உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த திட்டத்தின் கீழ் சேவைகளைச் செய்ய மக்களைத் தேடி அதிகாரிகள், அலுவலர்கள் வருவார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளி விளக்காகத் திகழ்ந்த இளையபெருமாளின் நூற்றாண்டு நினைவரங்கைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சமூக சீர்திருத்தவாதிகள் அயோத்தி தாசர் பண்டிதர், தாத்தா இரட்டை மலை சீனிவாசன், எம்.சி.ராஜா, சிவராஜ், சாமி சகஜனந்தா வரிசையில் கம்பீரமாகப் போராடியவர்தான் பெரியவர் இளையபெருமாள்.

இந்த மேடையில் மார்க்சிய இயக்கத் தலைவர்கள், காந்திய வழித் தலைவர்கள், அம்பேத்கர் வழித் தலைவர்கள் ஒற்றுமையாக அமர்ந்திருக் கிறோம். இதைத்தான் 'ஓரணியில் தமிழ்நாடு' என்று சொல்கிறேன். இதேபோல, தமிழ்நாடு ஓரணியில் நிற்கும்போது, டெல்லி காவி அணியின் கனவுத் திட்டமும் பலிக்காது.

அகில இந்திய தீண்டாமை ஒழிப்பு கமிட்டி தலைவராக இளையபெருமாள் இருந்தபோது, நாடு முழுவதும் பயணித்து, பட்டியலின மக்களின் மீதான சாதியக் கொடுமைகளை ஆய்வு செய்து, அறிக்கையை உருவாக்கினார். அவர் அளித்த அறிக்கை, சாதி அமைப்பை துல்லியமாகப் பதிவு செய்தது. அந்த அறிக்கை வெளிய வரக்கூடாது என்பதற்காக அவரைத் தாக்கினார்கள். அதிலிருந்து தப்பி நாடாளுமன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்தார். அவரது அறிக்கையின் அடிப்படையில்தான் தமிழகத்தில் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த 29 அர்ச்சகர்கள், வெவ்வேறு கோயில்களில் பணியாற்றி வருகிறார்கள்.

1998ல் அம்பேத்கர் பெயரிலான தமிழக அரசு விருதை முதன்முதலாக இளையபெருமாளுக்கு அப்போதைய முதல்வர் கருணாநிதி வழங்கினார். தற்போது நூற்றாண்டு அரங்கம் மற்றும் சிலையை திறந்து வைத்திருப்பது திராவிட மாடல் அரசு, அவருக்கு செலுத்தும் நன்றியாகும்.

புதிய அறிவிப்பு: கடலூர், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி பகுதிகளில் வாழும் மகளிருக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கும் வகையில், குறிஞ்சிப்பாடி அருகில் இருக்கும் கொடுக்கன்பாளையத்தில் 150 ஏக்கர் பரப்பளவில், தோல் அல்லாத காலணி மற்றும் காலணிகளுக்கான உதிரி பாகங்கள் உற்பத்திக்கான பெரும் தொழில் பூங்கா அமைக்கப்படும்.

சுற்றுச்சூழலுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாத வகையில், 75 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள இந்த தொழில் பூங்காவில், சுமார் 12 ஆயிரம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்ஆர்கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், சாமிநாதன், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொய்தீன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## "தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை" : செந்தில் பாலாஜி உறுதி

கரூர்: ஜூலை.16-

"தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கரூரில் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி இன்று 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் செய்தியாளர்களிடம் கூறியது: "வாங்கல் பகுதியில் விரும்பத்தகாத சம்பவம் நடந்துள்ளது. இதை வைத்து சிலர் மட்டமான, கீழ்த்தரமான, கேவலமான அரசியல் செய்கின்றனர். அந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர் என்னுடன் இருப்பது போன்ற புகைப்படங்களை பதிவிடுகின்றனர். அவர் இங்கு வருவதற்கு முன்பு அதிமுகவில் தான் இருந்தார்.

தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். 2021ம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது திமுக ஆட்சிக்கு வந்தவுடன் 5 நிமிடங்களில் மணல் அள்ளலாம் என நான் கூறியது, மாட்டு வண்டி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்காகவும், உள்ளூர் மணல் தேவைக்காகவும் மட்டுமே. ஏதோ லாரிகளில் சென்று ஆற்றில் மணல் அள்ளிக் கொள்ளலாம் என கூறியது போல சித்தரிக்கின்றனர்" என்று செந்தில் பாலாஜி கூறினார்.

## ''பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் அப்படியே உள்ளன'' அதிகாரிகள் மீது துரைமுருகன் ஆதங்கம்

வேலூர்: ஜூலை.16-

''பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மனுக்களாகவே உள்ளன. அதற்கான தீர்வு ஏற்படவில்லை. அதிகாரிகள் சரியாக இருந்தால்தான் தீர்வு கிடைக்கும்'' என்று காட்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஆதங்கத்துடன் பேசினார்.




வேலூர் மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட சிறப்பு முகாம் தொடக்கவிழா காட்பாடி செங்குட்டையில் (ஜூலை 15) நடைபெற்றது. இதில், சிறப்பு விருந்தினராக பங்கேற்ற நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், முகாமை தொடங்கி வைத்து பேசும்போது, "பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கைகள் தொடர்பாக அளிக்கும் மனுக்களுக்கு சாக்கு, போக்கு சொல்லாமல் உடனடியாக நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் இங்கு வந்ததில் இருந்து சிறப்பாக வேலை செய்கிறார். அவர் மட்டும் வேலை செய்தால் போதாது. உடன் இருக்கின்ற அதிகாரிகளும் சரியாக இருந்தால் தான் பரிகாரம் கிடைக்கும். பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மனுக்களாகவே உள்ளன. அதற்கான தீர்வு ஏற்படவில்லை. எனவே, பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை உடனடியாக பரிசீலினை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

பின்னர், செய்தியாளர்கள் சந்திப்பில், 'நடிகர் ரஜினிகாந்த் சீனியர்களின் ஆலோசனை ரொம்ப முக்கியம் என பேச நினைத்ததை மறந்துவிட்டேன்' என நிகழ்ச்சி ஒன்றில் கூறியிருந்தார்' என்ற கேள்விக்கு, துரைமுருகன் கூறும்போது, 'நானும் அந்த வீடியோவை பார்த்தேன். அவரை செல்போனில் தொடர்புகொண்டு இப்பவாச்சும் மறக்காம பேசுனீங்களே ரொம்ப தேங்க்ஸ் சார் என்றேன்' என கூறினார்.

பின்னர், 'அதிமுக ஆட்சிக்கு வந்ததும் திமுக அமைச்சர்கள் மீதான ஊழல் குறித்து விசாரிப்போம் என எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசி இருக்கிறாரே' என்ற கேள்விக்கு, 'அவர் வந்த காலத்துக்கு பாத்துக்கலாம்' என்றார்.

## 'திமுகவினரால் என் உயிருக்கு ஆபத்து' காவல் துறையிடம் ஆதவ் அர்ஜுனா புகார்

சென்னை: ஜூலை.16-

திமுகவினரால் தன் உயிருக்கு ஆபத்து என்று காவல் துறையிடம் தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா புகார் அளித்துள்ளார்.



நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளரான ஆதவ் அர்ஜுனா சார்பில் அவரது வழக்கறிஞர் மோகன் பார்த்தசாரதி, தி.நகர் துணை ஆணையர் குத்தாலிக்கத்திடம் அளித்துள்ள புகார் மனு ஒன்றை அளித்துள்ளார்.

அதில், "நான் எனது ஆழ்வார்பேட்டை அலுவலகத்தில் கடந்த மாதம் 10ம் தேதி அமர்ந்திருந்தேன். அப்போது எனது அலுவலகத்தைச் சுற்றி திமுக கொடி கட்டிய ஆட்டோ மற்றும் கார்களில் ஆயுதங்களுடன் சிலர் சுற்றி, சுற்றி வந்தனர். அவர்களால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே எனக்கும், எனது அலுவலகம் மற்றும் இல்லத்துக்கும் உரிய போலீஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும்" என்று அவர் புகார் மனுவில் கூறியுள்ளார். இந்த புகார் மனுவுடன் திமுக கொடி கட்டிய வாகனங்கள் தனது அலுவலகத்தை தொடர்ந்து வட்டமடித்து நோட்டமிட்ட சிசிடிவி கேமரா காட்சிப் பதிவுகளையும் போலீஸாரிடம் ஆதவ் அர்ஜுனா சமர்ப்பித்துள்ளார்.

தமிழக அரசு, முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோரை அரசியல் சார்ந்து விமர்சித்து வருகிறார் ஆதவ் அர்ஜுனா. இந்நிலையில் அவர் திமுகவினரால் தனது உயிருக்கு அச்சுறுத்தலும், ஆபத்தும் ஏற்பட்டுள்ளது என்று பரபரப்பு புகார் ஒன்றை அளித்துள்ளது கவனிக்கத்தக்கது.

## தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா ஆக.3ம் தேதி முதல் சுற்றுப்பயணம்

சென்னை, ஜூலை.16-

தமிழகத்தில் வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலையொட்டி தேமுதிக சார்பில் முதற்கட்ட சுற்றுப்பயணத்தை கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா ஆக.3ம் தேதி முதல் மேற்கொள்ள இருக்கிறார்.



அதன்படி திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதியில் தனது சுற்றுப் பயணத்தை தொடங்கும் அவர், தொடர்ந்து ஆவடி (ஆக.4), காஞ்சிபுரம் மற்றும் ராணிப் பேட்டை (ஆக.5), வேலூர் (ஆக.6), திருப்பத்தூர் (ஆக.7), ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரி (ஆக.8), தருமபுரி (ஆக.9), சேலம் (ஆக.11), கள்ளக் குறிச்சி (ஆக.13), நாமக்கல் (ஆக.14), கரூர் (ஆக.16), பெரம்பலூர் (ஆக.17), அரியலூர் (ஆக.18), மயிலாடுதுறை (ஆக.19), கடலூர் (ஆக.20), விழுப்புரம் (ஆக.22) ஆகிய பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து ஆக.23ம் தேதி செங்கல் பட்டு மாவட்டத்தில் முதல் கட்ட சுற்றுப்பயணத்தை நிறைவு செய்கிறார்.

இந்த பயணத்தில் 'உள்ளம் தேடி இல்லம் நாடி' என்ற தலைப்பில் பூத் முகவர்களை நேரடியாக சந்தித்து ஆலோசனையில் ஈடுபடுதல், 'கேப்டனின் ரத யாத்திரை', 'மக்களை தேடி மக்கள் தலைவர்' என்ற தலைப்புகளில் தொகுதி மக்களை சந்தித்து பிரச்சாரம் மேற்கொள்ளுதல் போன்ற நிகழ்ச்சிகளில் பிரேமலதா கலந்து கொண்டு, காலை மற்றும் மாலை நேரங்களில் தேர்தலுக்கான பணிகளில் தீவிரமாக ஈடுபடுவார் என அக்கட்சியின் தலைமையகம் அறிவித்துள்ளது.

# மருத்துவ படிப்பு நுழைவுத் தேர்விற்கான நீட் பயிற்சி வகுப்பினை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்தார்



மதுரை, ஜூலை.16-

மதுரை மாநகராட்சி இளங்கோ மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளியில் 2025-2026 ஆம் கல்வியாண்டில் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான மருத்துவ படிப்பு நுழைவுத் தேர்விற்கான நீட் பயிற்சி வகுப்பினை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், ஆணையாளர் திருமதி. சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று (15.07.2025) தொடங்கி வைத்தார்கள்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாளினை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் தொடர் நிகழ்வாக மதுரை மாநகராட்சி 12 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவ, மாணவியர்களில் மருத்துவ படிப்பு படிப்பதற்கு விருப்பம் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவ படிப்பு நுழைவு தேர்விற்கான நீட் பயிற்சி வகுப்பினை இளங்கோ மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மாண்புமிகு மேயர், ஆணையாளர் ஆகியோர் தொடங்கி வைத்து நீட் பயிற்சிக்கான புத்தகங்களை மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்கள். இப்பயிற்சியில் 30 மாணவ, மாணவியர்கள் பயிற்சி பெற உள்ளார்கள். இப்பயிற்சி சி.இ.ஓ.ஏ. பதின்ம குழு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள் நடத்தப்பட உள்ளது. இந்த பயிற்சி வகுப்பு வாரத்தின் ஒரு நாள் சனிக்கிழமைக்தோறும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். இப்பயிற்சி இன்று முதல் துவங்கப்பட்டு நீட் தேர்வு நடைபெறும் வரை தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும்.

இன்று நடைபெற்ற பயிற்சி வகுப்பில் அவ்வை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி 1 மாணவியும், ஈ.வெரா மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி 10 மாணவிகளும், கஸ்தூரிபாய் காந்தி மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, 3 மாணவிகள், மாசாத்தியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி 6 மாணவிகள், பொன்முடியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி 3 மாணவிகள், வெள்ளிவீதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி 3 மாணவிகள், திரு.வி.க. மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி 4 மாணவ, மாணவிகள் என மொத்தம் 30 மாணவ, மாணவிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், கல்விக்குழுத் தலைவர் திரு.ரவிச்சந்திரன், கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், நிகழ்ச்சி தொகுப்பாளர் ஆசிரியர் திரு.சண்முகத் திருக்குமரன், மாமன்ற உறுப்பினர் திருமதி. வசந்தாதேவி, நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை நிறுவனர் திரு.குருசாமி, பள்ளி தலைமை ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாநகராட்சி அலுவலா;கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# காரைக்குடி நவரத்தினா நகை மாளிகை சார்பில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்தினர்

காரைக்குடி, ஜூலை.16-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பிரபல நகைக்கடை நிறுவனமான நவரத்தின நகை மாளிகை சார்பாக, காரைக்குடி என் ஜி ஓ காலனியில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான விளை யாட்டுப் போட்டிகளை நடத்தினர். காரைக்குடி என் ஜி ஓ காலனி முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் தேவி மீனாள் மகேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விளையாட்டு போட்டியை துவக்கி வைத்தார். விழாவில் பல்வேறு விதமான போட்டிகள் நடத்தப்பட்டது. விழாவில் ஏராளமான குழந்தைகள் பெண்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பரிசினை தட்டிச் சென்றனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மட்டுமின்றி கலந்து கொண்ட அனைவருக்கும் நிச்சய பரிசுகள் வழங்கப்பட்டது. நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்கள் ஆசிப் அலி மற்றும் ஆசிக் ஆகியோர் கூறுகையில், குழந்தைகள் மற்றும் பெண்கள் சமீப காலங்களில் செல்போன் மற்றும் தொலைக்காட்சியில் அதிக நேரங்களை செலவிடுவதாகவும், அவர்களை அதுபோன்ற விளைவுகளில் இருந்து சற்று விலக்கி உடல் ஆரோக்கியத்திற்காகவும், மனவலிமைக்காகவும் இது போன்ற போட்டிகளை நடத்தியதாக தெரிவித்தனர். நவரத்தின நகை மாளிகை நிறுவனத்தினருக்கு, குடியிருப்போர் நல சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக் கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாட்டினை காரைக்குடி நவரத்தின நகை மாளிகை நிர்வாகம் செய்திருந்தது.



# ரோட்டரி கிளப் ஆப் காரைக்குடி பியர்ல் சங்கமத்தின் 10வது பதவியேற்பு விழா

காரைக்குடி, ஜூலை.16-

ரோட்டரி கிளப் ஆப் காரைக்குடி பியர்ல் சங்கமத்தின் 10வது பதவியேற்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் Rtn. MPHF.S. பிரான்சிஸ் சேவியர் தலைவராகவும், Rtn. X. எட்வர்ட் சின்னப்பன் செயலாள ராகவும், Rtn. A. அருண்குமார் பொருளாளராகவும் பணியேற்று கொண்டனர். இவ்வி ழாவில் ரோட்டரி கிளப் ஆப் கரூர் ஏஞ்சல்ஸ்ன் அறிவுரையாளரும், வாழ்க்கைத் திறன் பயிற்சியாளரும், தக்ஷின் கல்வி குழுமத்தின் தலைவருமாகிய Rtn. மீனா சுப்பையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பதவி பிரமாணம் செய்து வைத்தார். மேலும் இவ்விழாவில் மாவட்ட கல்வி அதிகாரி S..மாரிமுத்து, தேவகோட்டை ஆர்ச் ரோட்டரி சங்கத்தின்பட்டயத் தலைவர் Rtn.A. இராமநாதன், ரோட்டரி பியர்ல் சங்கத்தின் GSR பொறியாளர் அமலன் அசோக்,துணை ஆளுநர் (மண்டலம் 6) Rtn. MPHF. பொறியாளர் M. ஜோசப் செல்வராஜ், நகைச்சுவை அருவி சாத்தை M. பாரதிதாசன் மற்றும் காரைக்குடி ரோட்டரி சங்க உறுப்பினர்கள் தேவகோட்டை ரோட்டரி சங்க உறுப்பினர்கள் தேவகோட்டை ஆர்ச் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் புதுவயல் ரோட்டரி சங்க உறுப்பினர்கள், காரைக்குடி ஹரிடேஜ் ரோட்டரி சங்க உறுப்பினர்கள், காரைக்குடி ஒண்டர்ஸ் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொதுமக்கள் என பல தரப்பினரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். விழாவில் 1.50 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாட்டினை ரோட்டரி கிளப் ஆப் காரைக்குடி பியர்ல் சங்கமம் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

# பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் தெருமுனை கூட்டம்




பல்லாவரம், ஜூலை.16-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் தெருமுனை கூட்டம் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சரத் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி எம்.எல்.ஏ, கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார் அப்பொழுது மண்டல தலைவரும் பகுதி கழகச் செயலாளருமான இ.ஜோசப் அண்ணாதுரை தலைமைக் கழக பேச்சாளர்கள் நாத்திகம் நாகராஜன், சிலம்பரசன், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்திய பிரபு, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ச.பிரபு, ஜெ.இன்சாமாம், மாநகர பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருக்குறுங்குடியில் இருந்து கடையம் வரை 895 சதுர கி.மீ. பரப்பளவில் இந்தியாவின் 17ஆவது புலிகள் காப்பகமாக களக்காடு முண்டன்துறை அமைந்துள்ளது. பல்லுயிர்ப் பெருக்கத்துக்குப் புகழ்பெற்ற இங்கு புலி, சிறுத்தை, மான், மிளா, யானை போன்ற அரிய வகை விலங்கினங்கள், உலகில் வேறெங்கும் இல்லாத தாவர வகைகளும் உள்ளன. தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய காப்பகம் ஆகும். களக்காடு முண்டந்துறை புலிகள் வன காப்பகம் பகுதியில் உள்ள அகத்தியர் நீர்வீழ்ச்சிக்கு செல்லும் சாலை கடுமையாக சேதமடைந்துள்ளது. கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில்....தினமும் முந்நூறுக்கும் மேலான சுற்றுலா வாகனங்கள் வந்து செல்லும் இந்த சாலை போக்குவரத்துக்கே லாயக்கற்ற நிலையில் உள்ளது. அதனால் பாதுகாப்பு முறைகளுடன் சாலையை சீரமைக்க தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுலாவாசிகள் தரப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# திருவள்ளூர் ரயில் விபத்து: 4 பாதைகளிலும் இயல்பு நிலைக்குத் திரும்பிய ரயில் சேவை

திருவள்ளூர், ஜூலை.16-

திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே சரக்கு ரயிலில் தீ விபத்து ஏற்பட்ட பகுதியில் 4 ரயில் பாதைகளிலும் சீரமைப்பு பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இதனால், ரயில் சேவை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

சென்னை துறைமுகத்தில் இருந்து, 50 டேங்கர்களில் பெட்ரோல், டீசல் நிரப்பிக் கொண்டு நேற்று முன் தினம் அதிகாலை சென்று கொண்டிருந்த சரக்கு ரயில், திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இதனால், பயங்கர தீ விபத்து ஏற்பட்டு 18 டேங்கர்கள் எரிந்து நாசமாயின.

இதனால், சென்னை சென்ட்ரல்அரக்கோணம் இடையே ரயில்களின் சேவை நேற்று முன் தினம் நிறுத்தப்பட்டது. தீயணைப்பு வீரர்கள் சுமார் 11 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். தொடர்ந்து, சேதமடைந்த ரயில் பாதைகள் மற்றும் மேல்நிலை மின் கம்பங்கள், மின் கம்பிகள் ஆகியவற்றை சீரமைக்கும் பணி தொடங்கியது.

4வது ரயில் பாதையில் சீரமைப்பு பணி முடிவுக்கு வந்து, நேற்று முன் தினம் இரவு விரைவு ரயில் சேவை தொடங்கியது. 3வது ரயில் பாதையில் சீரமைப்பு பணி நேற்று காலை நிறைவு பெற்று, காலை 7 மணி முதல் புறநகர் மின்சார ரயில்கள் சேவை தொடங்கியது.

விரைவு ரயில் பாதைகளான 1 மற்றும் 2வது ரயில் பாதைகளில் இருந்த, தீக்கிரையான டேங்கர்கள் அப்புறப்படுத்தப்பட்டு, அப்பாதைகள் மற்றும் மேல்நிலை மின்கம்பங்கள், மின் கம்பிகள் சீரமைக்கும் பணி நேற்று தீவிரமாக நடைபெற்றது. இதில், விரைவு ரயில் பாதைகள் இரண்டிலும் தலா சுமார் அரை கி.மீ., தூரத்துக்கு தண்டவாளங்கள் கடுமையாக சேதமடைந்ததால், அத்தண்டவாளங்களை மாற்றும் பணி மற்றும் புதிய மின் கம்பங்கள், மின் கம்பிகளை மாற்றும் பணியில், 4 ஜேசிபி இயந்திரங்கள், 2 கிரேன்கள் சகிதம் ரயில்வே ஊழியர்கள் சுமார் 400 பேர் ஈடுபட்டனர்.

இப்பணியில், நேற்று மாலை 4.45 மணியளவில் 3வது ரயில் பாதை சீரமைப்பு பணி நிறைவு பெற்றது. 4வது ரயில் பாதை சீரமைப்பு பணி தொடர்ந்து நடைபெற்ற நிலையில், இடை இடையே மழை பெய்ததால், அப்பணியில் தொய்வு ஏற்பட்டது. இதனால், இன்று அதிகாலை 2.55 மணியளவில் 4வது ரயில் பாதை சீரமைப்பு பணி நிறைவு பெற்றது. ஆகவே, 46 மணி நேரம் நடைபெற்ற ரயில் பாதைகள் சீரமைப்பு பணிக்குப் பிறகு, திருவள்ளூர் அரக்கோணம் இடையே 4 வழித்தடங்களிலும் மின்சாரம் மற்றும் விரைவு ரயில், சரக்கு ரயில் சேவை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.



# சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் 15வது மண்டல அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம்

சென்னை, ஜூலை.16-

சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் 15வது மண்டல அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் மண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி செயலாளருமான வி .இ.மதியழகன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் கோவிந்தசாமி ,ஏகாம்பரம் , சங்கர் ,முருகேசன் , விமலா கருணா தங்களின் கோரிக்கைகளை விரைந்து முடித்து தருமாறு மண்டலக்குழு தலைவரிடம் கேட்டபோது சென்னை மாநகராட்சி அலுவலர்களிடம் ஏன் பணிகளை விரைந்து முடிக்கவில்லை என்று கேள்வி கேட்டதற்கு மண்டல ஆணையர் பணிகள் விரைவில் முடித்து தருகிறோம் என்று உறுதியளித்தார். ஆலோசனைக் கூட்டத்தில் மண்டல ஆணையர் , மண்டல உதவி ஆணையர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



# கல்லல் ஒன்றியத்திற்குட்பட்ட தட்டட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி


சிவகங்கை, ஜூலை.16-

சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தட்டட்டி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.



# ஆயக்குடியில் காங்கிரஸ் சிறுபான்மை துறை மாவட்ட அலுவலகம் திறப்பு விழா

திண்டுக்கல், ஜூலை.16-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடியில் இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத்தின் உட்பிரிவான தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை சார்பாக கல்விக்கண் திறந்த காமராஜர் 123 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதிய அலுவலகம் திறப்பு விழா மற்றும் கட்சி கொடி ஏற்று விழா நிகழ்ச்சி நடைபெற்றன.

இந்நிகழ்வின் தலைமையாக சிறுபான்மை துறை மாவட்ட தலைவர் பார்வீஸ் அலி அகமது முன்னிலையாக மாவட்ட தலைவர் சதீஷ்குமார் மற்றும் விழாவின் சிறப்பு அழைப்பாளராக ம தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை மாநில தலைவர் முகமது ஆரீப் மற்றும் இந்நிகழ்வில் அப்துல் கலாம் சர்தார், ஆசிக் ராஜா, ஹபீப் ரகுமான், தல்சா, ஜோஸ்வா, இஷாத் அகமது, மணிகண்டன் முத்துச்சாமி கவிமணி லோகநாதன் தேவேந்திரன் தயாளன், உமர் ஜோயல், ராஜ், சா பிராபாணு, பச்சையம்மாள் முருகானந்தம், சுந்தர், குப்புசாமி உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றன.

தொடர்ந்து மாநில தலைவர் கட்சி கொடி யேற்றி வைத்து மாவட்ட சிறுபான்மை துறை அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்..

# கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாட்டம்







காளையார் கோவில், ஜூலை.16-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை ப்பள்ளி கீழ்கோட்டையில் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள் விழா கொண்டாடப்பட்டது. பள்ளியின் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்றார். பள்ளிகளுக்கு மதிய உணவு தந்திட்ட பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு அவரது சாதனைகள் எடுத்துக் கூறப்பட்டன. ஆசிரியை கமலம்மாள் வாழ்த்துரை வழங்கினார். நிஷா வாய்ஸ் பவுண்டேஷன் நிறுவுநர் கிருஷ்ணன் மாணவிகளுக்கு புத்தாடைகள் வழங்கி சிறப்பித்தார். மாணவ மாணவிகளுக்கு கட்டுரை கவிதை ஓவியம் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. கர்மவீரர் முன்னாள் முதலமைச்சர் பெருந் தலைவர் காமராஜரின் வாழ்க்கை வரலாற்றை மாணவி தன்ஷிகா சிறப்பாக எடுத்து கூறினார். அனைத்து மாணவ மாணவிகளுக்கும் எழுதுபொருள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன. கணினி பயிற்றுனர் வித்யா நன்றி கூறினார். மாணவி நந்திகா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். பள்ளி மேலாண்மைக்குழு உறுப் பினர்கள் சத்யா ஹேம மாலினி கலந்து கொண்டனர்.



# அஜித்குமார் குடும்பத்துக்கு ரூ.7.50 லட்சம் இழப்பீடு: அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்

சிவகங்கை, ஜூலை.16-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமாரை (29) போலீஸார் விசாரணை யின்போது தாக்கி கொலை செய்தனர். இதையடுத்து ஜூலை 1ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அஜித்குமாரின் தாயார் மாலதி, சகோதரர் நவீன் குமார் ஆகியோருக்கு செல்போன் மூலம் ஆறுதல் கூறினார். தொடர்ந்து முதல்வர் உத்தர வுப்படி முதல்கட்டமாக ஜூலை 2ம் தேதி அஜித்குமார் சகோதரருக்கு காரைக்குடி ஆவினில் தொழில் நுட்புநர் பணிக்கான ஆணை மற்றும் அவர்களது குடும்பத்துக்கு 3 சென்ட் இடத்துக்குரிய வீட்டு மனைக்கான ஆணை ஆகிய வற்றை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்.

இதற்கிடையே தனக்கு ஆவின் நிர்வாகத்தில் வேலை வழங்கியதில் திருப்தி இல்லை. மதுரையில் ஏதேனும் ஓர் அரசு துறையில் பணி வழங்கியிருந்தால் நன்றாக இருக்கும். இலவச வீட்டு மனையிடமும் தேளி கிராமத்துக்கு அருகே அடிப்படை வசதி மற்றும் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் வழங்கியதால் பயனில்லை என அஜித்குமார் சகோதரர் அதிருப்தி தெரிவித்திருந்தார். மேலும் அஜித் குமார் குடும்பத்துக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டுமென உயர் நீதிமன்றமும் உத்தரவிட்டது. இந்நிலையில் நேற்று மீண்டும் அஜித்குமார் வீட்டுக்கு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி ஆகியோர் வந்தனர். பின்னர் அமைச்சர் ரூ.7.50 லட்சத்துக்கான காசோலையை அரசு சார்பில் அஜித்குமார் குடும்பத்துக்கு வழங்கினார்.

மேலும் மதுரை ஆவின் நிறுவனத்துக்குப் பணியிடமான ஆணையை மாற்றவும், வீட்டு மனை யிடத்தை மாற்று இடத்தில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறினார். அப்போது தமிழரசி எம்எல்ஏ, கோட்டாட்சியர் விஜயகுமார், பேரூராட்சித் தலைவர் சேங்கைமாறன், வட்டாட்சியர் விஜயகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

# நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட ஆளூர் பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு



கன்னியாகுமரி, ஜூலை.16-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியிலிருந்து காணொலி காட்சி வாயிலாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை துவக்கி வைத்ததைத்தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் நாகர் கோவில் மாநகராட்சிக்குட்பட்ட ஆளூர் மாநகராட்சி சமூகநல கூடத்தில் நடைபெற்ற முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டத்தினை இன்று துவக்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பொதுமக்களின் வசதிக்கேற்ப அவர்களின் பகுதிகளுக்கு அருகாமையிலேயே தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும், தேவைகளையும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து வழங்குவதற்கு ஏற்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் வழிவகை செய்கிறது.

இன்று தோவாளை வட்டம் ஞாலம் ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு அந்தரபுரம் இ சேவை மையத்தில் நடைபெற்ற முகாமில் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத் தலைவர் திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்கள் கலந்துகொண்டு, தகுதியான பயனாளி களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். அகஸ்தீஸ்வரம் வட்டம் கன்னியாகுமரி நகராட்சி வார்டு 1, 2 பகுதிகளுக்கு கன்னியாகுமரி நகராட்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்ற முகாமில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் திரு.வ.விஜய் வசந்த் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ. பாலசுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று, தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். கல்குளம் வட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 1, 2 பகுதிகளுக்கு ஆளூர் மாநகராட்சி சமூகநல கூடத்தில் நடைபெற்ற முகாமில் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜி.பிரின்ஸ் அவர்கள் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ் அவர்கள் ஆகியோர் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப, அவர்கள் முன்னிலையில் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று, தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

தொடர்ந்து கிள்ளியூர் வட்டம் கிள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு திப்பிறமலை ஸ்ரீ முத்தாரம்மன் கலையரங்கத்தில் நடைபெற்ற முகாமில் கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.செ. ராஜேஷ்குமார் அவர்கள் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று, தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். விளவங்கோடு வட்டம் விளவங்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பாலவிளை புனித அந்தோணியார் சமூகநலக்கூடத்தில் நடைபெற்ற முகாமில் விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் தாரகை கத்பர்ட் அவர்கள் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப, அவர்கள் முன்னிலையில் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று, தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். நடைபெற்ற முகாம்களில் பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, சான்றிதழ்கள் வேண்டி முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி, கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாளை 16.07.2025 கல்குளம் வட்டம் பத்மநாபபுரம் நகராட்சிக்குட்பட்ட 1, 2, 3ம் வார்டுகளுக்கு மேட்டுக்கடை லலித மஹால் திருமண மண்டபத்திலும், திருவட்டார் வட்டம் ஆற்றூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு ஆற்றூர் என்.வி.கே. எஸ்.டி பள்ளியிலும், விளவங்கோடு வட்டம் உண்ணாமலைக்கடை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மாமூட்டுகடை பி.எஸ்.மஹாலிலும், அகஸ்தீஸ்வரம் வட்டம் இரவிபுதூர் ஊராட்சிக்குட்பட்ட மருங்கூர் வி.எஸ் .என் ஹாலிலும், தோவாளை வட்டம் தோவாளை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு காட்டுபுதூர் சுயஉதவிக்குழு கட்டிடத்திலும், கிள்ளியூர் வட்டம் முன்சிறை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு சங்குருட்டி ஜிபின் கலையரங்கிலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் இம்முகாம்களுக்கு வருகை தந்து திட்டங்களில் இணைந்து பயன்பெற கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப, துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



■ மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் கல்வி கண் திறந்த கர்மவீரர் காமராஜ் பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுக்கா BHEL பாய்லரில் உள்ள காமராஜ் சிலைக்கு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி உள்ளோம் இதில் பொதுச்செயலாளர் ஆதி லெட்சுமி ஆனந்தராஜ் மாநில ஆலோசகர் ராமன் மாநில இளைஞரணி துணைத் தலைவர் ஜான் மாநில மகளிர் அணி துணைத் தலைவர் ஜெயராணி மாநில மகளிர் அணி செயலாளர் பானுமதி திருச்சி மாவட்ட இளைஞர் அணி தலைவர் ராஜசேகர் திருச்சி மாவட்ட செயலாளர் திலகவதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணை தலைவர் காந்திமதி மற்றும் அமைப்பின் ராஜேஸ்வரி கலந்து கொண்டு சிறப்பித்தனர்..



பழனியில் கல்விக்கண் திறந்த காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

திண்டுக்கல், ஜூலை.16-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைத் தலைவர்களில் ஒருவரான பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழகத் தலைவர் உத்தரவின்படி, கழகப் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வலியுறுத்தலின்படி. திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா ஆணைக்கிணங்க. பழனி ஆர் எப் ரோட்டில் அமைந்துள்ள பெரியார் சிலை அருகே கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் திருவுருவப் படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இந்நிகழ்வில். மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் நகரத் தலைவர் மிதுன். மற்றும் மாவட்ட நிர்வாகிகள் நகரம் ஒன்றியம் சார்பணி நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

# வருகின்ற 18.07.2025 அன்று, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.16-

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் இரண்டாம் அல்லது மூன்றாம் வெள்ளிக்கிழமையன்று சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. அதன்படி, வருகின்ற 18.07.2025 (வெள்ளிக் கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில், வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

மேலும், இம்முகாமில் இலவச திறன் பயிற்சிக்கான விண்ணப்பபடிவம், போட்டித் தேர்வுகளுக்கான இலவசப்பயிற்சி வகுப்பில் மாணவர் சேர்க்கை, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்படிவம் ஆகியவையும் வழங்கப்படும். எனவே, விருப்பமுள்ளவர்கள் பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்த இளைஞர்கள் தங்களது கல்விச்சான்று, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு அடையாள அட்டை, ஆதார் அட்டையுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமில் பணிவாய்ப்பு பெறுவோருக்கு பதிவுமூப்பு ஏதும் ரத்து செய்யப்படமாட்டது. எனவே வேலைநாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



# பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர தேமுதிக சார்பில் அவரது திருவுருவ சிலைக்கு மரியாதை செலுத்தப்பட்டது

தாம்பரம், ஜூலை.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக சார்பில் பகுதி செயலாளர் கேட்.எம். தர்மா தலைமையில் கிழக்கு தாம்பரம் பாரதமாதா தெருவில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவ சிலைக்கு செங்கல்பட்டு மாவட்ட துணை செயலாளர் மா.செழியன், கிழக்கு பகுதி செயலாளர் காந்தி சேகர், மேற்கு பகுதி செயலாளர் மார்கெட் ஞானபால், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு சுஜாத்தா நந்தினி ஆகியோர் மாலை அணிவித்து வீர முழுக்கமிட்டு மரியாதை செலுத்தினர். இதில் நிர்வாகிகள் ஜார்ஜ், ஏழுமலை, பாலமுருகன், குமார், சதீஷ்குமார், இளங்கோ, அண்ணாமலை, காந்தி,நாகராஜ், பாபு, தெற்கு பகுதி கேப்டன் மன்ற சேட் என்கின்ற தேவேந்திரன் மகளிர் அணி பானு, திலகா, மணி, கவின் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் செட்டிகுளம் கிராமத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி துவக்கி வைத்தார். முகாமில் மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொற்செல்வி,அழகு பாண்டி, ஊராட்சி செயலாளர் கணேசன் மற்றும் பல்வேறுதுறை சார்ந்த அதிகாரிகள் பங்கேற்று மனுக்களை பெற்றனர்.



■ மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் ஒத்தக்கடையில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் பெறப்பட்ட மனுவுக்கு உடனடி தீர்வாக 5 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி வழங்கினார்.அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் ஊராட்சி உதவி இயக்குநர் அரவிந்தன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜோதிராஜ், கதிரவன்,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் நேரு பாண்டி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீமான் ஆகியோர் உள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி இளங்கோ மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப் பள்ளியில் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான மருத்துவ படிப்பு நுழைவுத் தேர்விற்கான நீட் பயிற்சி வகுப்பினை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து மாணவிகளுக்கு பயிற்சி புத்தகங்களை வழங்கினார்கள் அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., துணை மேயர் நாகராஜன், கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், கல்வி அலுவலர் ஜெய்சங்கர், மாமன்ற உறுப்பினர் வசந்தாதேவி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் செக்கானூரணி அ.கொக்குளம் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மதுரை திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் சிவஜோதி, வட்டாட்சியர் கிளமண்ட் சுரேஷ்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,ஊராட்சி செயலாளர் பாண்டி மாயன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு டோக் பெருமாட்டி கல்லூரியின் முதல்வர் பியூலா ஜெயஸ்ரீக்கு நினைவு பரிசு புத்தகம் மற்றும் கேடயம் பொதுப்பணித்துறை கட்டுமான செயற்பொறியாளர் அய்யாசாமி, மின் திட்டம் செயற்பொறியாளர் இரணியன், உதவி பொறியாளர் சரவணன் ,நூலகர் தினேஷ்குமார், சந்தானகிருஷ்ணன்,மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# காமராஜர் 123-வது பிறந்தநாளன்று தென் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சார்பில் அன்னதானம்

மேடவாக்கம், ஜூலை.16-

சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் ஊராட்சி, ஜெயச்சந்திரன் டெக்ஸ் டைல்ஸ் அருகில் காமராஜர் 122 வது பிறந்தநாளன்று தென்சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் காங் கிரஸ் சார்பில் அன்னதானம் நடைபெற்றது. தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தென்சென்னை கிழக்கு மாவட்ட துணை தலைவர், அ.முகேஷ் (எ) முத்துக் குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில் காமராஜர் அவர்கள் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி அனை வருக்கும் வெஜிடபிள் பிரியாணி அன்னதானம் வழங்கி சிறப்பாக நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர், கோ. அ. மதன் தலைமையில் இளைஞர் காங்கிரஸ் மாநிலச் செயலாளர், அமர்நாத் தர்மராஜன், இளைஞர் காங் கிரஸ் சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தலைவர் ம. தமிழ்ச் செல்வன் முன்னிலையில் இளைஞர் காங்கிரஸ் ஆராய்ச்சி துறை மாநில ஒருங்கிணைப்பாளர், மயரா யுவராஜ் அனைவரையும் வரவேற்றார். சிறப்புரை யாளர்கள், பரங்கிமலை கிழக்கு ஒன்றிய காங்கிரஸ் தலைவர், பாரதி ஜி. சங்கர், பரங்கிமலை வடக்கு ஒன்றிய காங்கிரஸ் கமிட்டி தலைவர், ஜி. ஐ. சுதாகர், பா .பெ .செ. யூ எஸ் பி முருகானந்தம், மாவட்ட பிரதிநிதி, ஜி .சண்முகம், மேடவாக்கம் காங்கிரஸ் கமிட்டி தெற்கு தலைவர், ஏ.சி. தேவராஜ், மேடவாக்கம் காங்கிரஸ் கமிட்டி வடக்கு தலைவர், வி. ஜெகன்( எ) மகேஷ், மேடவாக்கம் காங்கிரஸ் கமிட்டி வடக்கு துணைத் தலைவர், சி. ராஜேந்திரன், மேடவாக்கம் காங்கிரஸ் கமிட்டி ,வெங்கடேசன், தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் பகுதி தலைவர், ஈஸ்வர், ஏ சி டி ராஜ்குமார், வி. பாலகிருஷ்ணன் , என். வேல்சாமி நாடார், ராஜன், தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் : பிரவீன், தினேஷ், யுவராஜ், பிரகாஷ், முருகன், அன்பு, கார்த்திக், பாலாஜி, பாலா, மதன், சுந்தர், மதன் , ராஜேஷ், அப்பு ,அருண், சீனிவாசன், எடிசன், சாம்தினேஷ், சுரேஷ், வெங்கட், அன்சாரி , ரிஸ்வான், அசரப், ராம்குமார் மற்றும் நன்றி உரையாக தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தென் சென்னை கிழக்கு மாவட்ட பொதுச் செயலாளர், ம.ஜஜீம் அக்தர் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் , பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.











■ சிவகங்கை மாவட்டம் இலுப்பைக்குடியில் உள்ள இந்தோதிபெத் எல்லைபாதுகாப்பு படையினர் நடத்திய விழிப்புணர்வு மிதிவண்டி பயணம் இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ் கோடியிலிருந்து இருந்து கன்னியாகுமாரி வரை கடந்த 08 /07/2025 இல் இருந்து 12/07/2025 வரை நடைப்பெற்று முடிந்தது. அதில் பயணித்த குழுவினை வரவேற்கும் விழா நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் செக்கேன்ட் கம்மான்டன்ட் VRசந்திரன், டெப்டி கம்மான்டன்ட் ராகுல் சிங் ரானா தலைமையில் இலுப்பாய்குடி இந்தோ திபெத் முகாமில் நடைபெற்றது



## மேலநெட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள்

மானாமதுரை, ஜூலை.16-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்துக்கு உட்பட்ட மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் இன்று கல்வி வளர்ச்சி நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தலைமை ஆசிரியர் (பொ) சோ.பாலகிருஷ்ணன் வரவேற்புரை வழங்கினார். PTA தலைவர் சுப.காசிராஜன் தலைமை தாங்கினார். SMC தலைவர் ச.ராஜாத்தி போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசு வழங்கி வாழ்த்துரை ஆற்றினார்.

இக்கல்வியாண்டில் ஆறாம் வகுப்பில் புதிதாக சேர்ந்த 50 மாணவர்களுக்கு சில்வர் வாட்டர் பாட்டிலை முன்னாள் மாணவரும், SMC உறுப்பினருமான மு.சிவா தலைமையில் நன்கொடையாக வழங்கப்பட்டது. முன்னாள் மாணவரும் வழக்கறிஞருமான லதா நாகராஜன் தம்பதியினர் 25 லிட்டர் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை பள்ளிக்கு நன்கொடையாக அளித்தனர். இன்று பிறந்தநாள் கொண்டாடிய மாணவர்கள் கிஷோர் மற்றும் விகாஷ் பள்ளி வளாகத்தில் ECO Club பொறுப்பாசிரியர் வெ. ஜெயஸ்ரீ வழிகாட்டுதல் படி மரக்கன்றுகளை நட்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை மொழிப்பாட ஆசிரியர்கள் அ.பாப்பாத்தி மற்றும் இரா.திவ்யா ஆகியோர் செய்தனர். இறுதியாக மகிழ் முற்றம் பொறுப்பாசிரியர் வே. முருகேசன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.





## காமராஜர் பிறந்த நாள் விழா மற்றும் கல்வி வளர்ச்சி நாள் விழா

மானாமதுரை, ஜூலை.16-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாரம் தெ.புதுக்கோட்டை அரசு நிதியுதவி பெறும் எம்.கே.என். நடுநிலைப்பள்ளியில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பாரதப் பெருந்தலைவர் கர்ம வீரர் காமராஜரின் 122 வது ஆண்டு பிறந்த நாள் விழா கல்வி வளர்ச்சி நாள் விழாவாக பள்ளி தலைவர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

பள்ளி செயலாளர் அன்பழகன் விழாவில் வாழ்த்துரை வழங்கினார்.

பள்ளி தலைமை ஆசிரியர் சிவகுருநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். பள்ளி கல்வி முகமை காரியதரிசி முருகேசன், செயலாளர் ஸ்ரீனிவாசன், பொருளாளர் தங்கராசு மற்றும் பள்ளி நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.பள்ளி மாணவ மாணவிகள் காமராஜர் பற்றி பேச்சு கவிதை கூறினர்.முட்டகுறிச்சி காமராஜர் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில் ரூ 30,000 மதிப்பில் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கல்வி உபகரணங்ளான கணித எண் சுவடி வாய்ப்பாடு, தேர்வு எழுதும் அட்டை, சிறுசேமிப்பை ஊக்குவிக்கும் உண்டியல்கள், மாணவர்கள் விளையாட கேரம் போர்டுகள், செஸ் போர்டுகள், டென்னிஸ் பேட்டுகள், ஸ்கிப்பிங் கயிறு வழங்கப்பட்டது.

மேலும் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் நினைவு பரிசாக பேனாக்கள் வழங்கினார்கள் . முன்னாள் மாணவர் உதயகுமார் தங்களது பள்ளி கால மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். காமராஜர் இளைஞர் நற்பணி மன்றத்தின் சார்பில் நடேஷ்குமார், ஜனார்த்தன மூர்த்தி, உதயகுமார், பாலமுருகன், சிவபாலன்,பள்ளி ஆசிரியை தெய்வானை நன்றி கூறினார்.

அனைவருக்கும் சத்துணவு அமைப்பாளர் காவேரி சார்பில் கேசரி சிற்றுண்டி வழங்கப்பட்டது.




## சிவகங்கையில் நில அளவையர்கள் ஆர்ப்பாட்டம்

சிவகங்கை, ஜூலை.16-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அரசு நில அளவையர் அலுவலர் ஒன்றிப்பு சங்கம் சார்பாக 48 மணி நேர அடையாள வேலை நிறுத்த நடைபெறுகிறது. இதில் ஒரு பகுதியாக மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் சிவகங்கை மாவட்டம் முழுவதும் உள்ள நில அளவையர்கள் தங்களது 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி. கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர் தலைமையாக மாவட்ட தலைவர் வேல்முருகன் செயலாளர் கார்த்திக் பொருளாளர் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161